1981 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி அறிக்கையை அமைச்சர் நாளையதினம் அளிப்பார். எனவே அமைச்சர் அளித்த அறிக்கை அவைக் குறிப்பிலே ஏற வேண்டியதில்லை என்று ஆணை யிடுகிறேன்.

5. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அனுமதி கோருவார்கள்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, சட்ட முன் வடிவை அறிமுகப்படுத்துவதையே ஆட்சேபிக்கக்கூடிய ஒரு பிரச் னையை எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கமாக, சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது உறுப்பினர்கள் தங்கள் கருத்தைச் சொல்லலாம்.

திரு. ரா. உமாநாத் : அறிமுகம் செய்வதையே அப்ஜெக்ட் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனினும் முதலில் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதிகோரும் தீர்மானத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மொழியட்டும். அத் தீர்மா னத்தை பேரவையின் முடிவிற்கு விடுவதற்கு முன் உறுப்பினர் கள் தங்கள் கருத்தைச் சொல்ல சந்தர்ப்பம் அளிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

திரு. என் சங்கரய்யா : தலைவர் அவர்களே, தமிழக அரசு சில இன்றியமையாப் பணிகளில் ஒழுங்குமுறையை மேலும் கண்டிப்பாகச் செயல்படுத்த வகை செய்வதற்கும் அது தொடர் பானவைகளுக்கு வகை செய்வதற்குமான இந்தச் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்வதை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்

கட்சியின் சார்பிலே வன்மையாக ஆட்சேபிக்கிறேன். சென்ற சட்ட முன்வடிவுகளை ஏற்கனவே முன்மொழிந்த காலத்திலேயும் கவர்னர் உரை மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய காலத்திலே கூட இந்தப் பிரச்னைபற்றி கிளப்பியபொழுது அது இன்னும் கொண்டு வரப்படவில்லையே என்று கூறினார். அதாவது, ஏற்கனவே சில சட்ட முன்வடிவுகள் அவசரச் சட்டங்களாகக் கொண்டு வரப்பட்டாலும், அவைகள் சட்ட முன்வடிவுகளாக சட்டசபையிலே கொண்டு வரப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. ஒரு அரசினுடைய ஒரு பழக்கத்திலே அப்படியும் இருந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டார்கள். ஆனால், இன்று இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பத்திலேயே இந்தச் சட்டமானது அறிமுகம் செய்ய வந்துள்ளது. தொழிலாளர்கள் உழைப்பாளி மக்கள், அரசு ஊழியர்கள், ஆகியோர்களுடைய நலன்களை, அவர்களுடைய அடிப்படை உரிமையைப் பறிக்கக் கூடிய மிகவும் கடுமையான ஒரு சட்டம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் அதை ஆட்சேபிக்கிறேன். அதிலே நீங்கள் பார்த்தீர்களென்றால், யார், யார் வருகிறார் என்றால், அதிலே, வராத பகுதியே இருக்காது. குடி நீர் வழங்கலிலேயிருந்து, சாதாரணமாக மோட்டார் போக்குவரத்திலே இருந்து, சுகாதாரம், துப்புரவிலேயிருந்து, மாநகராட்சி, நகராட்சி அல்லது ஏனைய உள்ளாட்சி மன்றங்கள், கிராமப்புற பஞ்சாயத்தில் இருக்கக் கூடிய ஊழியர்கள் உட்பட அவர்களுடைய கோரிக்கைகளுக்காக, வேலை நிறுத்தங்களிலே ஈடுபடுவதை தடை செய்வதற்காகச் சட்டம் கொண்டு வரப்பட்டு, அவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளதை மீறி அவர்கள் செய்தால், மிகக் கடுமையான தண்டனையை வழங்குவதற்கான ஏற்பாடுகள் இதிலே செய்யப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே, இவ்வளவு நீண்ட அரசியல் வரலாற்றிலே இப்படிப்பட்ட சட்டம் இருந்ததில்லை. இதனுடைய முன்னுரையிலே பார்த்தால், பொதுப் பாதுகாப்பையும், சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான பொருள் வழங்கல் ஆகியவற்றைப் பராமரிப்பதற்கும், அதற்கு அரசுக்குப் போதிய அதிகாரம் அளிப்பதற்குமென கொண்டுவரப்பட்டது என்று சொல்லப்பட்டது. இந்த அவசியம் இதுவரை இந்தத் தமிழகத்திலே உணரப்படவில்லை. ஆகவே, அவ்வாறு இந்த நீண்டகாலத்திலே உணரப்படாத ஒன்றை, இன்றைக்கு..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிமுகம் செய்கிற கட்டத்தில் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிற நேரத்தில் விரிவாகப் பேசலாம்.

திரு. என். சங்கரய்யா : ஆகவே, நாங்கள் வற்புறுத்துவது, தமிழகத்திலே உள்ள இலட்சக்கணக்கான உழைப்பாளி மக்கள், தொழிலாளிகள், மத்தியதர ஊழியர்கள் ஆகியோரது அடிப்படை உரிமையைப் பறிக்கக்கூடிய இந்தச் சட்டத்தைத் தமிழக அரசு

1981 பிப்ரவரி 26] [திரு. என். சங்கரய்யா]

உடனடியாக பின்வாங்க வேண்டுமே தவிர, அதை இன்றைக்கு இங்கே அறிமுகப்படுத்த அனுமதி கோருவதற்கு அவர்கள் முன் வரக்கூடாது அது இந்த நாட்டிலே உள்ள ஜனநாயக உரிமை களைப் பறிக்கக்கூடிய மிகக் கடுமையான ஒரு சட்டம் என்பதைத் தெரிவித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அறி முகம் பண்ணக்கூடிய இந்தக் கட்டத்திலேயே நான் அதை எதிர்க் கிறேன்.

* திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சட்டங்களை ஜனநாயக முறையிலே ஆட்சி நடத்துவதாகச் சொல்கிற ஒரு கட்சியோ அல்லது அரசோ கொண்டு வருவது என்பது ஜனநாயக உரிமை என்று நாட்டிலே போற்றிச் சொல்லப்படுகின்ற அந்த உரிமைகளையே அழிப்பதற்கு வழி செய்வதாகும் என்ற காரணத்தால், இப்படிப் பட்ட சட்டத்தை இந்த அவையிலே அறிமுகம் செய்வதையே நான் வன்மையாகக் கண்டிக்கின்ற கடப்பாடுடையவனாக இருக் கிறேன். வேலை நிறுத்தங்கள் செய்வது போன்ற உரிமைகள் அரசாங்க ஊழியர்களுக்கு மட்டும் அல்ல, காவல்துறையினருக்குக் கூட ஒரு உரிமையாகத் தரக்கூடிய அளவுக்கு, காவல் துறையினரே கூட அவர்கள் சங்கம் வைப்பதற்கும், சங்கத்தின் மூலமாகத் தங்களுடைய வேண்டுகோளை வலியுறுத்துவதற்கும் ஒரு நியாய மான உரிமை தரப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11—20)

காவல் துறையினருக்கே அப்படிப்பட்ட உரிமை தரப்படக் கூடிய ஒரு காலகட்டத்தில், மாநகராட்சி, நகராட்சி ஊழியர்கள் போன்றவர்கள், இன்று இல்லாத பஞ்சாயத்துகள் இயங்க முடி யாத பஞ்சாயத்து யூனியன்கள்—ஏனென்றால் பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள் என்பதெல்லாம், இன்றையதினம் நடை முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் அரசு அலுவலர்களாலே நடத்தப்படுகிற நிலை உள்ளது. ஏராளமான குறைகள், மாநகராட்சி மன்ற ஊழியர்களுக்கோ, பஞ்சாயத்து ஊழியர்களுக்கோ அல்லது வேறு பல அலுவலர்களுக்கோ. ஏற்படு கின்றன. அந்தக் குறைகளை அவ்வப்போது தீர்த்து வைக்கக் கூடிய ஆற்றல் இருக்குமானால், அரசுக்கு அந்த ஆற்றல் இருக்கு மானால், வேலை நிறுத்தம் செய்கிற அளவுக்கு அந்தப் பிரச்சினை வளராது. அண்மையிலேகூட மிக இன்றியமையாத தேவைப் படுகிற உணவுப் பொருளான பால் வழங்குகிற அந்தத் துறையிலே இருக்கின்ற ஊழியர்கள் கடந்த 3 மாதங்களாக வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வேலை நிறுத்தத்திலே உள்ளவர்கள் பல்வேறு பிரச்சினையிலே அந்த வேலை நிறுத்தத் தில் ஈடுபடுகின்றவர்களைக் கடுமையாக தண்டிப்பதற்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டாலே தவறு என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது ஜனநாயக உணர்வுடைய எந்தக் கட்சியும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல. அது மட்டு

[திரு. க. அன்பழகன்] [1981 பிப்ரவரி 26

மல்லாமல் எந்த அளவுக்கு இந்த அதிகாரத்தை இந்த அரசு பயன்படுத்தக் கருதுகிறது என்றால் அது இந்தச் சட்டங்களில் 8-வது பாராவில் தரப்பட்டிருக்கிறது.

" 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் (மத்திய சட்டம் 2/1974) என்ன சொல்லி இருப்பினும், காவல் துறை அதிகாரி ஒருவர் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றத்தை ஒருவர் செய்திருப்பார் என்று சந்தேகிக்க நியாயமிருந்தால், அவரைப் பிடியாணை இல்லாமல் கைது செய்யலாம். "

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது விரிவாகப் பேசலாம். இப்போது மைனர் டீடெயில்களுக்குள் எல்லாம் போகவேண்டாம்.

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சட்டத்திற்குள்ளே போய் விவாதிப்பது என்ற அந்தக் கட்டத்திற்குள் நான் செல்லவில்லை. சட்டத்தினுடைய நோக்கம், அடிப்படையிலே தவறானது. எல்லா வகையான ஊழியர்களும், அரசாங்கத்திற்கு எந்தவிதமான வேண்டுகோளோ கோரிக்கையோ எடுத்து வைக்க முடியாமல் தடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டம். உரிமையை வலியுறுத்தி கோரிக்கைகளை எடுத்து வைக்காமலேயே அரசாங்கத்திற்கோ அல்லது அவர்கள் பணியாற்றக்கூடிய அந்த நிறுவனத்திற்கோ கட்டுப்பட்டு பணியாற்றக்கூடிய நல்ல நிலைமை இருக்குமானால் நான் வரவேற்கிறேன். ஆனால், நிலைமை முற்றி உரிமைகளைக் கேட்கும் ஒரு நிலைமை ஏற்பட்டுவிடுகிறபோது அவர்களுக்கு பரிகாரம் தராமல் அவர்களைப் பழிவாங்கச் சட்டம் வருகிறது என்று சொன்னால் அந்தச் சட்டம் முறையானதல்ல என்ற காரணத்தால், ஊழியர்களுடைய நியாயமான உரிமை பறிக்கப்படுகிறது என்ற காரணத்தால், காவல்துறை கூட அதை ஏற்றுக்கொள்ளாது என்ற காரணத்தால் இதைக் கொண்டு வந்தாலும் நாட்டிலே நிறைவேற்ற முடியாது என்ற நிலைமையையும் ஏற்படுத்தும். எனவே, இந்தச் சட்டத்தின் மூலமாக அச்சுறுத்துகிற அல்லது ஒரு வகையிலே அந்த ஊழியர்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கிற அந்தக் காரியத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் வன்மையாகக் கண்டித்து அதை இந்த சட்டமன்றத்திலே கொண்டு வருவதையே எதிர்க்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமானது, இதேமாதிரி ஒரு சட்டம் இதே சட்டமன்றத்திலே இதற்கு முன்னால் ஒரு அவசரச் சட்டமாகக் கொண்டுவரப்பட்டு, அதற்குப் பின்னாலே இந்த அவையிலே திரும்பக் கொண்டு வரப்படாமலே அது அப்படியே விடப்பட்டிருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது மட்டுமல்லாமல், இந்தச் சட்டத்திலே வராத பகுதியே கிடையாது. அனைத்துத் துறையிலும், அது எந்தத் துறையிலேயும் பணியாற்றக்கூடிய அத்தனை தொழிலாளர்களும்

1981 பிப்ரவரி 26] [திரு. சோ. அழகர்சாமி]

இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக, நியாயமாக தங்களுடைய உரிமைக்காகப் போராடக்கூடிய ஒரு வேலை நிறுத்தம் போன்ற போராட்டத்திற்கு கடுமையான தண்டனையைக் கொண்டுவருவது மட்டுமல்லாமல், அதற்கு ஆதரவாக இருந்தாலும் ஓராண்டு சிறை, ஓராயிரம் அபராதம், அதிலே வேலை செய்யமாட்டேன் என்று சொன்னால் அவர்களுக்கு 2,000 அபராதம், ஓராண்டு சிறை. இப்படி ஒரு மோசமான சட்டத்தை அறிமுகம் செய்ய தாங்கள் அனுமதி அளிக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்வதோடு, அந்தச் சட்டத்தை நாங்கள் கடுமையாக, இங்கே அறிமுகம் செய்வதையே கடுமையாக ஆட்சேபணை செய்கிறோம் என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, இங்கே அவைமுன் அறிமுகப்படுத்தப்படுகிற சட்டம் அனைத்துப் பணி செய்கின்றவர்களின் உரிமைகளைப் பறிக்கின்ற வகையிலும், அவர்களைக் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்படுகின்ற வகையிலும், சந்தேகப்பட்டாலே ஒரு காவல் அதிகாரி அவர்களைக் கைது செய்யலாம் என்கிற வகையிலும் இருக்கிறது என்ற காரணத்தாலும், ஜனநாயக மரபுக்கும் நடைமுறைக்கும் முற்றிலும் மாறாக இருக்கிறது என்ற காரணத்தாலும், தெரிந்தோ தெரியாமலோ நன்கொடை கொடுத்துவிட்டாலும் அவர்களுக்கும் சிறை தண்டனை கொடுக்கப்படும் என்று இருக்கிற காரணத்தாலும், இவைகள் எல்லாம் எல்லா மரபுகளையும் மீறியதாக இருக்கிற காரணத்தாலும், அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாக இருக்கின்ற காரணத்தாலும், இந்த சட்ட வரைவினை இங்கே கொண்டுவராமல் இருக்க வேண்டும் என்று இந்த அரசை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பாக இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதற்கு ஆட்சேபணை தெரிவிக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அனைத்துப் பணியாளர்களும், அரசுப் பணியாளர்கள் உட்பட, அத்தனை பேரும் வேலை நிறுத்தம் செய்வதோ அல்லது அவர்கள் அனுமதி பெறாமல் வேலைக்கு வராமல் இருப்பதோ தவறு என்று சொல்லி, அதற்கு தண்டனை அளிக்கும் வகையில் இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல், எசன்சியல் சர்வீஸ் என்ற பெயரில் இந்த அரசு எதையெதை சொல்கிறதோ அவைகளில் எல்லாம் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படும் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. ஜனநாயக நாட்டில் தான் நாம் அரசுப் பணி செய்கிறோமா என்று எண்ணுகிற அளவிற்கு இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்படுகிறது.

இது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்கிற வகையில், அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன், இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வரக்கூடாது என்கிற வகையில் என் ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு முற்றிலுமாக தொழிற் சங்க உரிமைகளை அடியோடு பறிக்கின்ற வகையில் இருக்கின்றது என்பது மட்டுமல்ல, தொழிற் சங்கங்களைத் தலைமை தாங்கி நடத்திக்கொண்டு இருப்பவர்களுக்கும் தண்டனை வழங்கி, தொழிற் சங்கங்களை நடத்தவிடாமல், அவர்களை ஒடுக்குகின்ற வகையில் இந்தச் சட்ட முடிவு இருப்பதால், இந்தச் சட்ட முன்வடிவை இந்த அவையில் அறிமுகம் செய்யக்கூடாது என்று என்னுடைய கட்சியின் சார்பில் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு இங்கே வருவதற்குக் காரணமாக இருந்த அவசரச் சட்டம் எதற்காகக் கொண்டு வரப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும என்று கேட்டுக் கொள்கிறேன் பி. அண்ட் சி.மில் தொழிலாளர்கள் ஒரு பந்த் நடத்த வேண்டும் என்று வேண்டுகோள் விட்டபோது, இந்த அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்த பந்தை அவர்கள் நடத்தப்போவது இல்லை என்று அந்த மில்லைச் சார்ந்த தொழிற் சங்கத் தலைவர்கள் அறிவித்துவிட்ட பின்னர், அந்த சட்டத்திற்குத் தேவையில்லாமல் போய்விட்டது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, இந்த சட்டம் தேவையற்றது. இதை அரசாங்கம் அறிமுகப்படுத்தத் தேவையில்லை, வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

*திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, முன்பு ஒருமுறை இதைப்போன்ற ஒரு அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்த நேரத்திலே எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்ததால் அதை சட்டமாக்காமல் சாகவிட்டு விடுவோம் என்று சொன்னார்கள் . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து எதுவாக இருந்தாலும் அதைச் சொல்லலாம். ஆனால், நாங்கள் சொல்லாத ஒரு கருத்தை அவர்கள் சொல்கிறார்கள்.

அந்தச் சட்டத்தை அப்போது நாங்கள் பயன்படுத்தவில்லை என்று சொன்னோம். அப்படியே அதை காலாவதியாகவிட்டு விடுவோம் என்று சொன்னோம், அவைக் குறிப்பைப் பார்த்தால் தெரியும்.

திரு. நா. சுந்தரராஜ் : இப்போது மறுபடியும் அந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள். இதிலே சில ஷரத்துகள் மிகக் கடுமையான வகையில் இருக்கின்றன. பிடிவாரண்ட் இல்லாமல் கைது செய்யலாம். இத்தகைய சட்டம் சாதாரண உழைக்கும் வர்க்கத்தினர் மீது ஒரு ஜனநாயக நாட்டில் கொண்டு வரவேண்டுமா? பல்வேறு எதிர்க்கட்சிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அரசாங்கம் இந்த சட்டத்தை அறிமுகம் செய்வதில் குறிப்பாக உள்ளது என்பது சற்று வருத்தத்தைத் தருகிறது. அனைத்து கட்சிகளும் அறிமுகம் செய்வதை எதிர்த்து இருப்பதால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது என்று கேட்டு, அமர்கிறேன்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. . . . .

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, சபையில் இருக்கின்ற அத்தனைக் கட்சியினரும் இந்த சட்டத்தை எதிர்த்ததற்குப் பிறகும் இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்வதில் இந்த அரசு தொடர்ந்து வற்புறுத்துகின்ற காரணத்தால், இந்த சட்டத்திற்கு கடுமையான ஆட்சேபணையைத் தெரிவித்து, அறிமுகம் செய்வதையே எதிர்த்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நகராட்சி, ஊராட்சிமன்ற ஊழியர்கள் உட்பட, இன்றியமையாத பணியாளர்கள் என்று பட்டியலிலே இணைக்கப்பட்டு பிடியாணையே இல்லாமல் கூட அவர்களைக் கைது செய்யலாம் என்று காவலர்களுக்கு அதிகாரம் தருகின்ற இந்தச் சட்ட முன்வடிவை அனைத்துக் கட்சிகளும் எதிர்த்ததற்குப் பிறகும் கூட கொண்டுவரப்படுகின்ற காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகமும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமெண்ட்மென்ட்ஸ் கொண்டு வரலாமே?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
SATYAMEVA JAYATE
TRUTH ALONE TRIUMPHS

[1981 பிப்ரவரி 26

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, திருத்தங்கள் கொண்டுவரலாம் என்பது தங்களுடைய கருத்து. ஆனால், அதை ஏற்றுக்கொள்வதில்லை இந்த அரசு என்பது எங்களுடைய அனுபவம். எனவே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்றத்தில் இருக்கின்ற அத்தனை கட்சிகளும் சேர்ந்து சொல்லியும் கூட ஒரே பிடிவாதமாக இந்த மசோதாவை அறிமுகம் செய்ய வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிற காரணத்தால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்பதைத் தெரிவித்து வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவை நாயகர் அவர்களே, இங்கே இந்தச் சட்ட முன்வரைவைக் கொண்டுவர வேண்டாம் என்று காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வேண்டுகோள் வைக்கின்ற அதே நேரத்தில் மத்தியிலே இந்த மாதிரி சட்டங்களைக் கொண்டுவருவதிலே முனைப்புக் காட்டுகின்றவர்கள் கூட, அதற்குத் துணை நிற்கின்றவர்கள் கூட இங்கே வெளிநடப்புச் செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்களை இங்கே பாராட்டி அங்கேயும் இவ்வாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்று அறிவித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவரவர்களே, பணியாளர்கள், அரசு ஊழியர்கள், மாநகராட்சி ஊழியர்கள் என்ற அத்தனை பேர்களுடைய உரிமையும் பாதிக்கப்படுகின்ற அளவுக்கு போலீசார் அவர்களைக் கைது செய்யலாம் என்று ஜனநாயக நாட்டில் அரசு ஊழியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு சட்டத்தை அறிமுகம் செய்வதை எதிர்த்து அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி வெளிநடப்புச் செய்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(அகில இந்திய பார்வர்ட் ப்ளாக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 பிப்ரவரி 26]

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவரவர்களே, இப்போதும் கூட ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. எதிர்க்கட்சிகள் அத்தனையும் ஒட்டுமொத்தமாக எதிர்ப்புத் தெரிவித்தும் கூட, அரசு இந்த சட்டத்தைக் கொண்டு வருவதைப் பொருத்தவரையில் வற்புறுத்தாமல் இருக்க வேண்டும் என்று எல்லாக் கட்சிகளும் சொல்லியும் கூட அரசு அதனை ஏற்க மறுக்கின்ற காரணத்தால் தமிழ் நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி இதை எதிர்த்து இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

கே. பி. முகமது இஸ்மாயில் : தலைவரவர்களே, எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கின்றவர்கள் மட்டுமல்லாமல் ஆளும் கட்சியின் துணைக் கட்சிகளாக இருப்பவர்கள் கூட வெளிநடப்புச் செய்கின்ற நேரத்தில் நான் மட்டும் இங்கே அமர்ந்திருப்பது உகந்ததாக இருக்காது என்பதைச் சொல்லிக் கொண்டு சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொண்டு பின்னர் வருகிறேன் என்பதைச் சொல்லி வெளிநடப்புச் செய்கிறேன்.

[ஜனதா (ஜேபி.) கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்.]

THIRU K. S. G. HAJA SHEREEF : Sir, It should be the policy of every Government to maintain strict discipline among the public workers. But certain sections in this Bill are very stringent and we are not agreeable to it, Particularly Sec. 8, which says that a person can be arrested by Police even without any warrant.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்ற விதிகளைத் திருத்த வேண்டும் என்று கருதுவார்களேயானால், எதிர்க்கட்சியினர் திருத்தங்கள் கொண்டுவரலாம். அதை நிச்சயமாக பேசி முடிவெடுத்து, சட்டம் சரியாக அமைக்கப்பெறவில்லை என்று தெரிந்தால் அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும்.

THIRU K. S. G. HAJA SHEREEF : Sir, I am thankful for the clarification given by the Hon. Chief Minister. But since almost all the opposition parties have given their objection I would even now request the Hon. Chief Minister to see that

[Thiru K. S. G. Haja Shereef] [1981 பிப்ரவரி 26

this Bill is not introduced and not taken for consideration against the wish of all political parties. I hope he will accept this suggestion.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்தில் இப்படிப் பட்ட சட்டங்கள் கொண்டு வந்தபோது கூட, அங்கேயுள்ள எல்லா எதிர்க்கட்சிகளும் அதனை எதிர்த்தனவே ஒழிய, இப்படி அறிமுக நிலையிலேயே எதிர்த்து வெளிநடப்பு செய்தது இல்லை. பிறகு விவாதித்து, திருத்தங்கள் கொண்டு வர வாய்ப்பிருக்கிற நிலையிலேயும் இப்படி வெளிநடப்புச் செய்கிற ஒரு புதிய சூழ் நிலை தற்போது உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதையும், ஆகவே இச்சட்டமுன் வடிவின் மீது சிந்தித்து திருத்தங்கள் கொண்டு வந்து, விவாதித்து அதற்குப் பிறகு ஒரு முடிவு எடுக்கின்ற நிலையில் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். இந்த அரசு கொண்டு வந்திருக்கிற சட்டங்கள் அத்தனையும் அப்படியே முழுமையாக நிறைவேற்றப்பெற வேண்டும் என்று இந்த அரசு எப்பொழுதும் சொன்னதில்லை. அந்த வகையில் விவாதிக்கத் தயாராக இருக்கிறோம். இந்தச் சட்டமன்றத்தில் இருக்கிற எதிர்க்கட்சி நண்பர்களுடைய கருத்துக்களுக்கு நிச்சயம் இந்த அரசு மதிப்புக் கொடுக்கும், என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. S. G. HAJA SHEREEF : Thank you Sir, for the assurance given by the Hon. Chief Minister.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற 'தமிழ்நாடு 1981-ம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன் வடிவினை' எதிர்த்து எதிர்க்கட்சியினர் பலர் வெளிநடப்புச் செய்தனர். அப்படிச் செய்வதை சில காலமாக மரபாக வைத்துக் கொண்டிருக்கின்றனர். எங்களுடைய குடியரசுக் கட்சியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன விளக்கத்தின்படி இந்தச் சட்டமுன்வடிவின் மீது நல்ல விளக்கங்கள் தந்து, பொதுமக்களையும், தொழிலாளர்களையும் பாதிக்காத வகையில் நல்ல முறையில் திருத்தங்களைக் கொண்டு வந்து மக்களைப் பாதுகாக்க முன் வர வேண்டும் என்ற வேண்டுகோளை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர். கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். (கூச்சல், குழப்பம்)

1981 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No. point of order you have already staged a walk out. You have returned now. I am ready to receive you.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 4/1981) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2,3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

---

* 1981ம் ஆண்டு சனவரி மாதம் 28-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.